

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.06.2023) தலைமைச் செயலகத்தில், மொனாக்கோ ஆற்றல் படகு சவாலில் பங்கேற்கத் தேர்வு செய்யப்பட்டுள்ள இந்தியாவின் ஒரே அணியும், இந்தியாவின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் படகை உள்நாட்டு உந்துவிசை அமைப்புடன் உருவாக்கியுள்ள கோயம்புத்தூர், குமரகுரு கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த டீம் சீ சக்தி (Team Sea Sakthi) என்ற மாணவர் குழுவினை ஊக்குவிக்கும் வகையில், இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான செலவுத் தொகையான 65 இலட்சம் ரூபாயில் அரசின் சார்பில் உதவித் தொகையாக 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் அருண் ராய் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்குநர் சிவராஜா ராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.6.2023) தலைமைச் செயலகத்தில், ரமேஷ் வங்கிபுரம் எழுதிய "Warpath Walking the Battlefields of Cholas" என்ற புத்தகத்தை வெளியிட்டார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, செந்தில்நாதன், திருமதி தீபா கிறிஸ்டி, திருமதி பார்வதி பீட்டர் ஆகியோர் உள்ளனர்.

### சிறந்த சமூக சேவகர்

# பாலம் பா.கலியாணசுந்தரத்திற்கு குடியிருப்பு ஒதுக்கீடு ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூன் 30 -

சிறந்த சமூக சேவகர் "பாலம்" பா.கலியாணசுந்தரம் அவர்களுக்கு

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் திருமங்கலம் என்.வி.என். நகர் திட்டப் பகுதியில் குடியிருப்பு ஒதுக்கீடு ஆணையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.06.2023) தலைமைச் செயலகத்தில், சிறந்த சமூக சேவகரான "பாலம்" பா.கலியாண சுந்தரம் அவர்களின் சமூக சேவையை பாராட்டி, அவர்களைக் கௌரவிக்கும் வகையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சென்னை, திருமங்கலம் என்.வி.என். நகர் திட்டப் பகுதியில் குடியிருப்பு ஒன்றினை ஒதுக்கீடு செய்து, அதற்கான ஆணையினை வழங்கினார்.

"பாலம்" பா.கலியாண சுந்தரம் அவர்கள் கல்லூரியில் நூலகராக பணியாற்றிய காலத்தில் பெற்ற ஊதியம், ஒய்வூதியம், குடும்ப சொத்து மற்றும் விருதுகள் மூலம் கிடைத்த அனைத்தையும் தொண்டு பணிக்கே வழங்கியதோடு, "பாலம்" என்ற அமைப்பினை தொடங்கி நீண்ட காலமாக மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகவும், குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காகவும் பணியாற்றி, இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது மற்றும் அமெரிக்காவின் "ஆயிரம் ஆண்டுகளில் சிறந்த மனிதர்" (Man of Millennium) விருது பெற்றுள்ளார். சமூக சேவகர் பாலம் பா. கலியாணசுந்தரம் அவர்களின் சேவையை பாராட்டி, அவரை கௌரவிக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சென்னை, திருமங்கலம் என்.வி.என். நகர் திட்டப்பகுதியில் குடியிருப்பு ஒன்றினை அவருக்கு ஒதுக்கீடு செய்து, பயனாளி பங்குத் தொகையினையும் அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. குடியிருப்பு ஒதுக்கீட்டிற்கான ஆணையினை நேற்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "பாலம்" பா.கலியாண சுந்தரம் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டையில் மருத்துவ முகாம்!

புதுக்கோட்டை, ஜூன் 30 -

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மறமடக்கி அரசு மேல்நிலைப்பள்ளியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலைமாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்து, பார்வையிட்டார். மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மா.செல்வி, வருவாய்கோட்டாட்சியர் சு.சொர்ணராஜ், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.நமச்சிவாயம், அறந்தாங்கி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. மகேஸ்வரி சண்முகநாதன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.முகமது இந்தியாஸ், வட்டாட்சியர் (ச.பா.தி.) திருமதி.பரணி, ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. ராஜமனோகரி ரவி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.

### உத்தரப்பிரதேசத்தில்

# 'பீம் ஆர்மி' தலைவர் சந்திரசேகர் ஆசாத் மீது தாக்குதல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஜூன் 30-**

**உத்தரபிரதேசத்தில் பீம் ஆர்மி தலைவர் சந்திரசேகர் ஆசாத் மீது தாக்குதல் நடைபெற்றிருப்பதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:

பீம் ஆர்மி தலைவர் சந்திரசேகர் ஆசாத் அவர்கள் மீது உத்தர பிரதேச மாநிலம் சஹரன்பூரில் நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலுக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உத்தர பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு வருவதை இந்த வன்முறைச் செயல் அம்பலப்படுத்தி இருக்கிறது. காயமடைந்துள்ள சந்திரசேகர் ஆசாத் அவர்கள் விரைந்து நலம்பெற விழைவதோடு, கோழைத்தனமான இந்தத் தாக்குதலை நிகழ்த்திய குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

### கால்பந்து தொடரில் அபார வெற்றி:

# தமிழ்நாடு மகளிர் அணிக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் 'ட்விட்டர்' பதிவு!

சென்னை, ஜூன் 30-

தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் தொடரில் வெற்றி பெற்று கோப்பை வென்றுள்ள தமிழ்நாடு மகளிர் கால்பந்து அணிக்கு பாராட்டு தெரிவித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:

**27ஆவது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் தொடரில் அபாரமான வெற்றியைப் பெற்றுக் கோப்பையைக் கைப்பற்றியுள்ள தமிழ்நாடு மகளிர் கால்பந்து அணியினருக்குப் பாராட்டுகள். ஒரு போட்டியில் கூட தோற்காமல் இறுதிப்போட்டிக்கு முன்னேறி அடைந்திருக்கும் இவ்வெற்றி மிகவும் சிறப்புக்குரியது. உங்களது அர்ப்பணிப்பும், திறமையும், அணியாக ஒருங்கிணைந்து விளையாடிய பாங்கும் எங்களைப் பெருமைகொள்ளச் செய்துள்ளன. தொடர்ந்து உயரப் பறந்து மென்மேலும் நம் மாநிலத்துக்குப் பெருமை சேர்ப்பீராக!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.


